மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

நமது மேயர் அப்துல்காதர்!

மாலைமணி
ஆசிரியர்: பி.எஸ். இளங்கோ

மணி 2 | 6—12—59 | ஒலி 6

இரண்டாவது தி.மு. க. மேயர்!

சென்னை மாநகருக்கு இரண்டாவது தி. மு. க. மேயராக திரு எம் எஸ். அப்துல்காதரும் துணைமேயராக திரு. தேவராஜனும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை தமழகத்து மக்களுக்குச் சொல்லும் போது எங்களுக்கே எல்லையில்லாத மகிழ்ச்சிப் பிறக்கிறது! இந்தச் செய்தியைக் கேட்டு நாமெல்லோரும் பூரிப்படைகிறோம், பெருமையும் பேரானந்தமும் கொள்ளுகிறோம்! "நமக்கு ஈடு, நாம் தான்" என்று வெற்றிப் புன்னகைப் புரிந்தபடியே வீர உலா வருகிறோம்!

இந்த மேயர் தேர்தல் தமிழகத்திலேயே ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது! அரசியல் உலகுக்கே ஒரு பெரும் அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது!

ஏதும் புரியாமல் நம்மை ஏசித் திரிந்த பேதைகளுக்கெல்லாம், இந்த மேயர் தேர்தல் நம்மை, யார் என்பதை திட்ட வட்டமாக எடுத்து விளக்கிக் காட்டி இருக்கிறது! நம்முடைய வலிவு என்ன என்பதை, நம்முடைய பொலிவு என்ன என்பதை, நம்முடைய பணி என்ன என்பதை எல்லாவற்றையும்விட நம்முடைய **நாணயம்** என்ன என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறது!

இந்தத்தேர்தல், நம்மைப்பற்றி புரியாதவர்களுக்கெல்லாம் புரிய வைத்திருக்கிறது, நம்மைப்பற்றி தெரியாதவர்களுக்கெல்லாம் நம்மைப் பற்றித் தெரிய வைத்திருக்கிறது!

"நாம் யார்?" புரிந்து கொள்ளாமலேயே இருந்தார்கள் பலர்! இந்த வினவுக்கு விடை தெரியாமலேயே திண்டாடிக் கொண்டிருந்தார்கள் சிலர்! அவர்களுடைய ஐயமெல்லாவற்றையும் இந்தத் தேர்தல் தீர்த்து வைத்து விட்டது!

"சொக்காய் இல்லை, இந்த "ஐந்தைக்" கண்டால் சொக்கி விடுவான் பயல்" என்று சொன்னவர்கள் உண்டு!

"பத்து பச்சை நோட்டுகள் பறந்தால்பதவி, என் காலடியில்" என்று எண்ணியவர்கள் இங்கே பலருண்டு!

"குந்த குடிசை இல்லாதவன். குடிக்க கூழுக்கும் வழியில்லாதவன், படுக்கப் பழம் பாயுக்கும் கதியில்லாதவன்" என்ற எண்ணத்திலே "பாக்கட்டை"த் தட்டிக் காட்டியே பதவியை பறித்தவர்கள் இங்கே ஏராளம், மிக ஏராளம்!"

இந்தத் தேர்தல் இதற்கெல்லாம் முற்றுப் புள்ளியை வைத்துக் காட்டி இருககிறது!

தி. மு. க.வில் 45 பேர்கள்—உண்மை, உண்மை!

தி. மு. க.வின் ஆதரவில் வெற்றி பெற்றவர் ஒருவர்—முழு உண்மை, கண்ணுக்குத் தெரிந்த உண்மை!

கம்யூனிஸ்டுகளும், அவர்களைச் சார்ந்த நண்பர்களும் ஆறு பேர்! ஆமாம்! ஆமாம்!

ஆக மொத்தம் 52 பேர்கள்! நாடறிந்த எண்ணிக்கை இது!

காங்கிரஸ் கட்சியில் வீற்றிருப்பவர்கள் 37 பேர்கள்—பொய்யல்ல, இது பொய்யல்ல!

அவர்களை ஆதரிப்பதாகச் சொல்லும் நகர நல முன்னணியினர் 11 பேர்கள்! சரி தான், சரி தான்!

ஆக மொத்தம் அங்கே இருப்பது 48—இது சத்தியம், இது சத்தியம்!

ஆனாலும் மேயர் தேர்தலுக்கு அந்த நாற்பத்தி எட்டு வருகிறது, ஐம்பத்தி இரண்டோடு போட்டியிட! என்ன விந்தை, இது என்ன விந்தை!

52 தான் எண்ணிக்கையில் பெரிது—48 அதை விட சிறிய எண்ணிக்கை தான்! இதை யாரும் பொய் யென்றும் சொல்ல மாட்டார்கள்! என்றாலும் மேயர் தேர்தலுக்கு அந்த 48 போட்டிப் போடுகிறது என்றால் என்ன அர்த்தம்? நாணயத்திலே நம்பிக்கையில்லாதவாகள் இந்த ஐம்பத்தி இரண்டிலே இருக்கிறார்கள் என்று அர்த்தமா? நாணயத்தை விலைக்கு வாங்கி விடலாம் என்ற தைரியமா? காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர் ராஜாராம் நாயுடுஜீயும் தயவு செய்து இதைவிளக்கிட வேண்டும்

காங்கிரஸ்கட்சி மேயர் பதவியை நினைத்துப் பார்ப்பதே தவறு, அந்தப் பக்கம் தலையை வைத்துப் படுப்பதே பெரும் தவறு!

மைனாரிட்டி கட்சி ஒரு தேர்தலிலே போட்டி இடுகிறது என்றால் என்ன அர்த்தம்! நாணயத்தை, ஒழுங்கை, கட்டுப்பாட்டை, கடமையை, கண்ணியத்தை ஏலம் போட்டு நாட்டை சீர்குலைக்க முன் வருகிறது என்று தானே பொருள்!

இது தான் காந்தியார் வளர்த்த காங்கிரஸ் கட்சியா! இந்த ஒழுக்கக் கேட்டை நாட்டிலே பரப்புவதற்கு தான் சுதந்திரம் வாங்கினீர்களா? இந்த நிலை நீடிக்குமானால் நாகரீகம் எப்படி வளரும் நாணயம் எப்படித் தழைக்கும்?

இத்தனைக்கும் பிறகு நீங்கள் பெற்ற ஓட்டுகள் தான் எத்தனை? அதைக் கொஞ்சமாவது எண்ணிப் பார்த்தீர்களா?

உங்களுக்கு கிடைத்த ஓட்டுகள் 43!

ஏன்? ஏன்?

இரண்டு ஓட்டுகள் செல்லாதவைகள்!

காரணம் யாது?

ஒருவர் வரவே இல்லை!

நிலைமை என்ன ?

மேயர் தேர்தலுக்கு நின்றவர் ஓட்டு போடவில்லை! ஆக மொத்தம் 47!

நாற்பத்தி எட்டுக்கு ஒன்று எங்கே போயிற்று!

இதைப் பற்றி யெல்லாம் கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் உங்களுடைய அரசியல் நிலை என்ன என்பது தெளிவாகப் புரியும!

மேயர் தேர்தலில் போட்டியிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், திராவிட முன்னேற்றக் கழகத்திலுள்ள செயல் வீரர்களின் நாணயத்தைப் பற்றியும், அவர்களுடைய கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகளைப் பற்றியும் உலகுக்கு எடுத்துக் காட்டிய உங்களுக்கு நாங்கள் முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம் !

என்றாலும் இது போன்ற செயல் நாட்டுக்கும், மனித சமுதாயத்திற்கும் பொதுவாக நன்மை பயக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறோம்! பெரும்பான்மையாக உள்ள ஒரு கட்சியை ஆசாபாசங்களை காட்டி வீழ்த்த நினைப்பதும், கொலை, கொள்ளையை விட தீமை பயக்கும் காரியமாகும்!

சென்னை நகர சபையில் உள்ள காங்கிரஸ் கட்சியினர் பெரும்பான்மையாக உள்ள தி. மு. க.விற்கு விட்டுக் கொடுத்திருந்தால், போட்டியிடாமல் இருந்திருந்தால் உலகமே அவர்களைப் பாராட்டி இருக்கும்!

11-ம் பக்கம் பார்க்க

சென்னை நகரச் சரித்திரத்தில் மீண்டும் ஓர் திருப்பம் !

தி. மு. க. தொண்டர் அப்துல்காதர் மேயர் பதவியை ஏற்றார் !

துணை மேயர் தேவராசன் !

பச்சை நோட்டை வீசியவர்கள் படுதோல்வி, படுதோல்வி !

பணத்தால் அடிபட்டு விழுந்தவர்கள் இங்கே இல்லை, இல்லை!

நாணயம் வென்றது ! அநீதி அழிந்தது !

பெய்த மழையிலும் பத்தாயிரம் மக்கள் கூடினர் !

வாழ்த்தொலி முழங்கினர் ! மேயரைப் பாராட்டினர்!

அடிபட்டு வீழ்ந்த காங்கிரசுக்கு இனியேனும் புத்தி வருமா ?

தமிழகத்தின் தலைநகராம், திராவிடத்தின் பெரு நகராம், சிங்காரச் சென்னையின் ஆட்சிப் பொறுப்பை தி.மு.க. தொண்டர் **திரு. எம். எஸ், அப்துல்காதர்** ஏற்றுக் கொண்டார் என்ற செய்தி தமிழகத்தை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தி இருக்கிறது!

சென்ற ஆறு திங்களுக்கு முன்பு, முன்னூறு ஆண்டு காலச் சரித்திரத்தில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கி சென்னை நகர ஆட்சிப் பொறுப்பை, மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரிடம் ஒப்புவித்தனர்! முதல் மேயராக திரு. அ. பொ. அரசுவும். துணைமேயராக பழங்குடி பெருமகன் திரு.சிவசங்கரனும் பொறுப் பேற்றுக் கொண்டு பல பெரும் பணிகளை செய்தனர்! மக்களிடையே நல்ல செல்வாக்கையும், புகழையும் பெற்று திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும் மதிப்பைத் தேடித் தந்தனர்!

இன்று அந்தப் பொறுப்பை திரு. எம். எஸ். அப்துல்காதரும்' துணை மேயர் திரு. தேவராஜனும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

திரு. எம். எஸ். அப்துல்காதர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பதவி ஏற்றுக்கொண்ட இரண்டாவது மேயராகும்!

திரு. தேவராஜன் இரண்டாவது துணை மேயராகும்!

மேயர் பதவி ஏற்பு வைபவம் சென்ற திங்கள் முப்பதாம் நாள் சென்னை நகராட்சி மன்ற கட்டிடத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்றது!

மக்கள் தீட்டிக் கொண்டிருக்கும் புரட்சி காவியத்திலே இந்த நாள் பொன்னாளாக, புனித நாளாக, புதுமை நாளாகப் பொறிக்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

''திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பதவிப் பொறுப்பிலிருந்து விரட்டி யடிக்க வேண்டும்'' என்று பகற் கனவு கண்டவர்களின் எண்ணத்திலே இடி விழுந்த இந்த நாளை பொன்னாள் என்று போற்றுவதிலே தவறில்லை! புரட்சித் திருநாள் என்று எண்ணி மகிழ்ச்சி யடைவதிலேயும் பிசகில்லை!

நீதி வென்ற நாளை, நாணயம் வெற்றி பெற்ற நாளை நாம் எண்ணி எண்ணி மகிழ்வதில் என்ன தவறு இருக்கிறது!

வெள்ளம் பெரு வெள்ளம்!

மேயர் தேர்தலின் முடிவைக் காண்பதற்காக சென்னை நகராட்சி மன்றத்தின் முன்பு பகல் ஒரு மணியிலிருந்தே மக்கள் திரள் திரளாக வந்து குவிந்த வண்ணம் இருந்தனர்! சரியாக மணி மூன்றாயிற்று—நகர சபை கட்டிடமும் மக்கள் வெள்ளத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கத் தொடங்கிற்று! மணி நான்கு அடித்தது! அப்போது நகர மன்றம் தெரியவில்லை! அது மக்கள் கடலிலே மூழ்கிக் கிடந்தது! பெரு மழை பெய்தது என்றாலும் இந்த மக்கள் வெள்ளத்தை அசைக்க முடியவில்லை!

கையில் கொடிகளோடு வந்து வாழ்த்தொலி முழங்கிய வண்ணம் கட்டிடத்தின் உச்சியை அண்ணாந்து பார்த்த வண்ணம் இருந்தனர்!

சரியாக 3-3' மணிக்கு மேயர் திரு. அ. பொ. அரசு முன்னிலையில் ரகசிய ஓட்டெடுப்பு நடை பெற்றது! சரியாக 5 மணிக்கு அப்துல்காதருக்கு 52 ஓட்டுகளும், காங்கிரஸ் அபேட்சகர் திரு.சுல்தான் மொய்தீனுக்கு 48

(10-ம் பக்கம் பார்க்க)



ஆணையாளர் பாலசுப்பிரமணியமும் பதவியேற்ற அப்துல்காதரும்,

ஆட்சியாளர்களின் அலட்சிய மனப்பான்மையைகிளர்ச்சியின்மூலமே அழிக்க முடியும் !

பசிக் கொடுமை இப்படியே நீடித்தால் புரட்சி தோன்றுவது நிச்சயம் !

ஈரோட்டில் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு முழக்கம்!



22—11—59-ந் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 7-மணிக்கு ஈரோடு காரை வாய்க்கால் திடலில் நடந்த சர்வ கட்சிப் பொதுக் கூட்டத்தில் தோழர் சி.பி. சிற்றரசு அவர்கள் ஆற்றிய உரைச் சுருக்கம்.

தோழர்களே, பெரியோர்களே !

நாட்டிலே தற்போது தோன்றியிருக்கும் உணவு நெருக்கடியையும், விலைவாசிகள் உயர்வையும் குறைக்க ஆளும் கட்சிக்கு நமது எதிர்ப்பை தெரிவிக்க இந்த சர்வகட்சி கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது.

இந்த நாட்டு மக்கள் மந்திரிகளிடம் அரிசி கிடைக்கவில்லை. சர்க்கரை விலை ஏறி விட்டது எங்களுக்கு வாங்கும் சக்தி இல்லை என்று சொன்னால் மந்திரிகள், "அரிசி கிடைக்காவிட்டால் கோதுமை சாப்பிடு, சர்க்கரை கிடைக்கா விட்டால் சர்க்கரை இல்லாமல் காப்பி குடி" என்று திமிராக பதில் சொல்லுகிறார்கள். இந்த நாட்டில் தற்போது எந்த விதமான புரட்சியும் ஏற்படாது என்ற எண்ணத்தில் தான் மந்திரிகள் இந்த மாதிரி பதில்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவர் சொன்னார் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்று. ஆனால் இன்று இருக்கும் நிலைமை. ஆளும் கட்சி செய்யும் தவறுகளை பார்க்காமல் குருடனைப்போல,

"கண்கட்டி வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாம் கை கட்டி பின் செல்பவர்" என்ற புதுக் குறள் பாடும்படி இருக்கிறது.

அரிசி கிடைக்கவில்லை நாங்கள் என்ன செய்வது என்று மக்கள் கேட்டால், மந்திரிகள் "மரவள்ளிக்கிழங்கு சாப்பிடுங்கள். வெண்டைக்காய் சாப்பிடுங்கள் அவைகள் இரும்புச் சத்து உள்ளவை" என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன் "மந்திரிகளே நீங்கள் இரும்பையே சாப்பிடுங்கள் உங்களுக்கு இரும்புச் சத்தே உண்டாகும்! ஆளும் கட்சியினர் சொல்கிறார்கள் நாங்கள் தான் சுயராச்சியம் வாங்கினோம்! நாங்கள் தான் மக்களை கவனிக்கிறோம். இதற்கு மேல் தி.மு.க. கூட்டம் எதற்கு கம்யூஸ்ட்கட்சி கூட்டம் எதற்கு" என்று. ஊரிலே இரண்டு பொக்கை வாயர்கள் இருப்பதால் ஊரில் பட்டாணிக் கடலையே விற்கக் கூடாதா? பாகற்காய் பிடிக்காது என்பதற்காக மார்க்கட்டில் பாகற்காயே விற்கக் கூடாதா?

விலை உயர்வினால் தவிக்கும் மக்கள் எங்கே மற்ற கட்சிக்காரர்கள் பக்கம் சேர்ந்து விடுவார்களோ, என்ற பயத்தில் அவர்கள் கவனத்தை திருப்புவதற்காக காங்கிரஸ் மற்ற கட்சிகளை குறைகூறி வருகிறது.

பிரஞ்சிலே லூயி—ரஷ்யாவில் ஜார் மன்னன் ஆகியோர் "நாங்கள் தான் இரண்டாவது கடவுள்" என்று சொன்னார்கள். அவர்கள் நிலை என்ன வாயிற்று? ஏழை எளியவர்கள் தான் அவர்களை கீழே தள்ளினார்கள். மேல் நாட்டு அறிஞன் ஒருவன் சொன்னான் "யோக்கியனாய் இருப்பதைப் போல் நடித்துக் கொண்டிரு ஆனால் உண்மையிலேயே யோக்கியனாய் இருந்து விடாதே, உன்னால் வாழமுடியாது" என்று இதே முறையில் தான் ஆட்சியாளர்கள் இருந்து வருகிறார்கள். தற்போது நாடெங்கும் நியாய விலைக் கடைகள் திறந்திருக்கிறார்கள். அப்படியானால் அநியாய விலைக் கடை எது? இன்று இங்கு காங்கிரஸிலே இருக்கும் பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் எந்த தியாகத்தை செய்து ஜெயிலுக்குப் போனார்கள்? அவர்கள் வீட்டிலே இன்று காந்தி படத்தையும், நேரு படத்தையும் மாட்டி வைத்திருக்கிறார்கள் அதனால் காங்கிரஸ்காரன் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இன்று சிறைச்சாலை திருட்டு சாராயம் காய்ச்சுபவர்களால் நிறைந்து இருக்கிறது. சர்வ கட்சி மீண்டும் விலை உயர்வை குறித்து பெரிய போராட்டம் நடத்தும், அதில் கைதாகிறவர்களை அடைத்து வைக்க புதிதாகத் தான் சிறைச் சாலை கட்டவேண்டும் தி. மு. கவினருக்கு சிறைச்சாலை சர்வ சாதாரணம் பட்டேல் அவர்கள் சிறை சென்றிருந்த போது அவருடன் 40 பேர்கள் சிறைக்கு சென்றார்கள். அங்கே படேலுக்கு 'மட்டும் கொசு வலை கொடுத்தார்கள். அவர் மீண்டும் போராடி மற்றவர்களுக்கும் வாங்கினார். மோர் வேண்டாம் தயிர் வேண்டும் என்று சத்தியமூர்த்தி சிறையில் போராடினார். இவ்வளவு தொல்லைப் பட்டவர்கள் தானே இன்று இந்த நாட்டை ஆளுகிறார்கள்! வெள்ளைக்காரனைவிட யோக்கியமாக ஆள வேண்டாமா? வெள்ளைக்காரன் ஆட்சிக்கும் இவர்கள் ஆட்சிக்கும் இன்று உள்ள வித்தியாசம் அன்று சர்க்கரை வீசை ரூ 1-8-0 இன்று ரூ 3-50 ந.பை.க்கு கிடைக்கிறது. அன்று போலீஸ்காரன் தடியிலே பூண் இல்லை இன்று பூண் இருக்கிறது.

இன்று காலில் சுடும்படி போலீஸ்காரர்களுக்கு உத்தரவு கொடுக்கப்படுகிறது. ஆனால் சுடப்பட்டது காலில் என்றால் மூளை எப்படி சுவற்றில் தெறிக்கும்? துப்பாக்கிப் பிரயோகத்தில் அடிபட்டவர்கள் விபரத்தை சர்க்கார் தஸ்தாவேஜுகளில் சரியாகக் குறிப்பதில்லை. மக்கள் வெள்ளைக்காரனை ஏன் போகச் சொன்னார்கள். அவனை விட நல்லாட்சி இருக்கும் என்ற நம்பிக்கையில் தான். இனியும் இந்த ஏமாற்று வித்தை செய்து கொண்டு பயனில்லை பொறுப்பை உணர்ந்து மக்களுக்கு வேண்டியதைச் செய் இல்லா விட்டால் என்றைக்கும் இப்படியே இருக்கும் என்று எண்ணாதே என்றாவது ஒரு நாள் புரட்சி தோன்றும் என எச்சரிக்கிறேன்.

சென்ற ஆண்டிலே இங்கு பட்டினியால் செத்தவர்கள் தொகை 3000 பேர்கள், இதில் 2000 பேர் பெண்கள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் ஆண்களை விட பெண்கள் அதிக தைரியசாலிகள். அவர்களுக்கு ஏற்பட்ட வாழ முடியாத நிலை தான் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுகிறது.

இன்று இருக்கும் உணவு பற்றாக்குறையை ஒழிக்க முடியாத இந்த சர்க்கார் மக்கள் குழந்தை பெறுவது கூடாது என்று சொல்லுகிறார்கள். குழந்தைகளை அளவாகப் பெற்றுக் கொள்ளும்படி நாங்களும் தான் சொல்லுகிறோம். ஆனால் பிறந்தவர்களை என்ன செய்யலாம்? பொறுப்பை ஏற்றுத் தானே ஆகவேண்டும்? மாதம் ரூபாய் 150 இருந்தாலும் ஒரு குடும்பத்துக்கு பற்றாது இருக்கும் இந்த நிலைமையிலே, ஆட்சியாளர்களுக்குள்ள அலட்சிய மனப்பான்மையை யார் மாற்றுவது? சென்னையிலே ஆயிரக்கணக்கானவர்கள் பிளாட்பாரத்திலே வாழ்க்கை நடத்துகிறார்கள்! அவர்கள் பிளாட் பாரத்தில் வசிப்பதால் குழந்தை பெறாமலா இருக்கிறார்கள்? பெற்றுக் கொண்டு தானே இருக்கிறார்கள் இந்த நாட்டு மக்களுக்கு இந்த அவல நிலை ஏன்? இந்த நாட்டு மக்களை இந்த நிலைக்கு

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த நாட்டு சுதந்திரம் கருப்பஞ்சாறல்ல வெறும் தழை! இதுவே இனிக்கிறதாம்!

மனித உரிமையை உலகிற்கு உணர்த்திய உத்தமர் ஆபிரகாம்லிங்கன்!

ஆபிரகாம்லிங்கன் நினைவு விழாவில் பேராசிரியர் க. அன்பழகன் பேருரை!

சென்னை நகர நல சேவா சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆபிரகாம் லிங்கன் பிறந்த தின விழாவில் கலந்து கொண்ட பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

விழா தலைவர் அவர்களே! பெரியோர்களே, தாய்மார்களே! அருமை நண்பர்களே! இங்கு நடைபெறுகின்ற இவ்விழாவிலே கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விழாவிற்கு தலைமை வகித்தவர் ஆபிரகாம் லிங்கன் ஆற்றிய அரும் பெரும் பணிகளை குறித்தும், நம் நாட்டு வழிகாட்டி அண்ணல் காந்தியார் பற்றியும், இருவருக்கும் உள்ள கருத்து ஒற்றுமையை விளக்கியும் எடுத்துக் கூறினர்.

ஆபிரகாம் லிங்கனைப் பற்றியும், அவர் காட்டிய நல்வழிகளை நாட்டு மக்கள் உணர வேண்டும் என்ற கருத்து கொண்டே, ஆபிரகாம் லிங்கனைப்பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். அவர் சொன்ன கருத்துக்களை உணர்ந்து போற்றவும், நாம் இந்த மகிழ்ச்சிவிழாவிலே எல்லோரும் கலந்து கொண்டிருக்கிறோம்.

உலகத்தில் பல உத்தமர்கள் அந்தந்த நாட்டின் சூழ்நிலை— பண்புக் கேற்றபடி தங்களது கருத்துக்களை கூறினார்கள். அவர்கள் சமுதாயம் வாழவும் மனிதனின் உரிமை அழிக்கப் படாமல் இருக்கவும் உயர்ந்த தத்துவங்களை கூறினார்கள். உரிமையை காப்பாற்ற வேண்டுமென்கின்ற எவரும் அந்த உத்தமர்களை போற்றுகிறார்கள்.

அப்படி, மனித உரிமைக்காக போராடிய ஆபிரகாம்லிங்கனின் பிறந்த நாளை விழாவாக்கிய நண்பர்களை பாராட்டுகிறேன்.

இம்மன்றத்திலே உள்ள இளைஞர்கள் பல்வேறு வகையிலே ஏழை எளியவர்க்கு தன்னலான பணியினை இம்மன்றத்தின் மூலம் செய்து நல்வழி காட்டி இருக்கிறார்கள்! நேற்று அண்ணல் காந்தியின் பிறந்த நாளை கொண்டாடினார்கள். இன்று ஆபிரகாம்லிங்கன் பிறந்த நாளை கொண்டாட ஏற்பாடுசெய்திருக்கிறார்கள். ஆபிரகாம் லிங்கனைப்பற்றிகருத்தினை தெரிவிக்க விரும்புகிறேன்!

இந்த நாட்டிலே பிறந்த எல்லோருக்கும் உத்தமா காந்தியை பற்றி நன்றாக தெரிந்திருக்கும். அமெரிக்காவிலே பிறந்த ஆபிரகாம் லிங்கனை பற்றி இந்த நாட்டில் பலபேருக்கு தெரியாது. வேண்டுமானால் பலபேருக்கு ஆபிரகாம் பண்டிதரை தெரியும்

மழை கால நோய்க்கு மருந்து கண்டு பிடித்த அவரையும் பாராட்டத் தான் வேண்டும்!

ஆபிரகாம் லிங்கன் பல பேர் உணர்ச்சிகளில் கலந்து இருந்தவர்! மனித சமுதாயம் வாட்டம் போக்க ஆபிரகான்லிங்கன் பாடுபட்டார்! அப்படிப்பட்ட பல உத்தமர்களை இன்று புரிந்து கொள்ளவில்லை!

கிரேக்கத்திலே பிறந்த சாக்ரடீசை இந்த நாட்டிலே உள் பலருக்கு தெரியாது!

பிளேட்டோவின் போதனைகளை அறிய மாட்டார்கள்! அவருக்குப்பின்னாலே தோன்றிய அரிஸ்டாடிலைப் பற்றி தெரியாது! அவர் சொன்ன அரசியல் தத்துவம் அறிய மாட்டார்கள்!

புரட்சிக்கு வித்தூன்றிய— பிரான்ஸ் நாட்டில் பிறந்தரூசோவை அறிந்திருக்க மாட்டார்கள். ஆபிரகாம் லிங்கனைப்பற்றி தெரியாது! டார்வின் பற்ற தெரியாது! உலகப் பொது உடமை தத்துவத்தை உணர்த்திய காரல் மார்க்ஸை பற்றி பலபேருக்கு தெரியாது! ரஷ்யாவிலே பெரிய புரட்சியை உண்டாக்கிய லெனினைப் பற்றி பல பேருக்கு தெரியாது!

ஆபிரகாம் லிங்கனை பற்றி நாம் கூறுகிறோம். நாம் சொன்னாலும் பல பேருக்கு தெரியாது! ஏன் ஆபிரகாம் லிங்கனை பற்றி தெரிந்து கொள்ளவில்லை என்று கேட்டால் நமக்கு இருக்கிற ஆழ்வாரதிகளையும், நாயன்மார்களையும் பற்றியே தெரிந்து கொள்ள முடியவில்லை என்கிறார்கள்

ஆழ்வாரதிகளின் பெருமைகளை பாடப்படுகின்ற பஜனை மடங்களிலே கடவுள்களின் ஏராளமான படங்கள் மாட்டப் பட்டிருக்கும். அந்தப் படங்களைப் பார்த்தவர்கள் ஆபிரகாம் லிங்கனின் படத்தைப் பார்த்தால் கிருஷ்ணன், ருக்மணி பாமாவை அணைத்துக் கொண்டிருப்பது போன்ற ஜதை இல்லையே என்று கூறுவான்.

இத்தகைய மூட பழக்க வழக்கங் நிறைந்திருக்கின்ற காரணத்தாலே தான் நம்மவர்கள் ஆபிரகாம் லிங்கனை பற்றி அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

நம் பண்பாடு அறிந்து—நம் நாட்டு சூழ்நிலைக் கேற்ப சமுதாயம் செழிக்க ஊன்றிய கருத்துச் செல்வர்களை, பல்வேறு வழிகாட்டிகளை பலர் அறிய மாட்டார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னாலே நம் நாட்டிலே தோன்றிய திருவள்ளுவர் அரசியல் போராட்டத்தில் சிக்கவில்லையென்றாலும் அமெரிக்காவிலே ஆபிரகாம் லிங்கன் பெற்ற வெற்றியைய போல் கருத்து உலகத்தில் வள்ளுவர் அடைந்திருக்கிறார்.

வள்ளுவர் தோன்றிய நாட்டில் பிறந்தோம் என்று உணர்ந்திருந்தால் ஆபிரகாம் லிங்கன் என்றோ நம் உள்ளத்தில் இடம் பெற்றிருப்பார். நம் நாட்டவர்களிலே குறிப்பிட்ட சிலர்தான் அவரைப்பற்றி ஏட்டின் மூலம் அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

காந்தி அகிம்சை தத்துவத்தை போதித்தார். விடுதலைக்காக பாடுபட்டார். மனிதன் ஏற்றத்தாழ்வு அற்றவராய் வாழவேண்டுமென்று நினைத்தார்! 1809ம் ஆண்டிலே பிறந்த ஆபிரகாம் லிங்கன் 1864ம ஆண்டு வரை வாழ்ந்தார்! ஏறத்தாழ 55 ஆண்டு காலம் அவர் வாழ்ந்தார். அந்த காலத்திற்குள்ளே அவர் அமெரிக்க மக்களுக்கு ஆற்றிய பணிகளும், அவருடைய அடிப்படை தத்துவத்தையும் தலைவர் எடுத்துக் கூறினர்.

அடிமை ஒழிய வேண்டும். விடுதலை அடைய வேண்டுமென்கின்ற உள்ளம் உடையவர்கள். மனித உரிமையைப் பற்றி பேசுகின்றவர்கள், மனித உரிமையை மதிப்பவராக இருக்க வேண்டுமென்ற கருத்தை மிகத் தெளிவாக, திட்டவட்டமாக ஆபிரகாம் லிங்கன் எடுத்துணர்த்தியிருக்கிறார்.

அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டுமென்று அமெரிக்காவிலே விடுதலைப் போராட்டம் நடத்தினர், வெற்றி கண்டார்!

செட்டி நாடு ராஜா குடும்பத்திலே பிறந்தால்தான் அரசியலிலே பங்கு கொள்ள வேண்டுமென்று சிலர் கருதுகிறார்கள்.

மிகச் சாதாரணமான குடும்பத்திலே, தச்சப் பட்டரை வைத்திருக்கும் பாட்டாளியின் குடும்பத்திலே பிறந்தார். எளிமைக் குடும்பத்திலே பிறந்த காரணத்தாலேதான் உலக கஷ்ட நஷ்டங்களை அவரால் உணர முடிந்தது என்று கருதுகிறேன்.

ஆடுமாடுகளை விலை பேசி விற்பதுபோல் நீக்ரோக்களை அடிமைப்படுத்திக் கொண்டார்கள். வெள்ளையர்கள் நீக்ரோ பெண்களை மிக மிகக் கேவலமாக கருதிக் கொண்டிருந்தார்கள்.

இன்றுகூட அக்ரகாரத்திலே உள்ளவர்கள் சேரி மக்களை தீண்டத்தகாதவர்களாக கருதி நடப்பதைப் பார்க்கிறோம்.

முதலியார் தெருவிலேயும், செட்டியார் தெருவிலேயும் இக்கொடுமை இருப்பதை இன்னும் காண்கிறோம்.

தீண்டாமை, ஆதி திராவிடர்களுக்கு மட்டுமில்லை! காமராசர் சார்ந்திருக்கிற நாடார் இனத்தைக்கூட தென்னாட்டு கோயில்களில் அனுமதிக்கக் கூடாது என்ற நிலைமையும் இருந்தது, பல பேர் ஆண்டவன் சந்நிதியிலே நுழைய முடியாது என்ற நிலைமை வந்தபோது புதிய மார்க்கங்களான கிருஸ்துவ மதத்திலும் முகம்மதிய மதத்திலும் சேர்ந்தார்கள்.

புதிதாக சேர்ந்தவர்களுக்கு வாழ வழி அமைத்துக் கொடுத்தார்கள். வாழ வேண்டுமென்பதற்கும், வாழ்க்கைக்கும் நம்பிக்கை ஊட்டினார்கள்.

அடிமைத்தனத்தை அடியோடு ஒழிக்க பாடுபட்டவர் ஆபிரகாம் லிங்கன்.

இவரை விலங்கொடித்த வீரர் என்றும் சொல்வதுண்டு. உலகத்

(8-ம் பக்கம் பார்க்க)

பாய்ந்து வந்த பண அஸ்திரங்களை தவிடு பொடியாக்கிய வீரர்கள்!

தினம் தினம் மக்கள் பணி புரியும் தொண்டர்கள்!



என். ஜீவரத்தினம்

சென்ற ஆறுமாத காலமாக நகர சபையில் நம் கட்சித் தலைவராக இருந்து பணிபுரிந்து வரும் இவர் சென்னை எட்டாவது வட்டத்தில் காங்கிரஸ் கட்சியை பெருமைப்படத் தக்க விதத்தில் வீழ்த்தி வெற்றி பெற்ருர். இந்த மேயர் தேர்தலில் பணநாதனை வீழ்த்தி ஜனநாயகத்தை காத்திட்ட வீரருமாவார்!



சிவசங்கரன்

துணை மேயர் சிவசங்கரன் ஏழைகளின் பங்காளராக, ஏழைகளோடு ஏழையாய் ஒன்றி வாழ்ந்து குடிசை வாழ் மக்களுக்களுக்காக பெரும் தொண்டை செய்தவர்! வந்தவரை இன்முகம் காட்டி வரவேற்றவர். வருபவர்களின் உள்ளங்களை மகிழ வைத்தவர்!



குசேலர்

சுகாதார கமிட்டித் தலைவராக இருந்து நகரின் சுகாதார வசதிகளை நன்கு பெருக்கியவர். குறிப்பாக குடிசைப்பகுதி இவரது பணியால் சிறப்பான சுகாதாரத்தால் பெற்றிருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.



மணிவண்ணன்

சுகாதார குழு உறுப்பினராக இருந்து நல்ல பணிகளை புரிந்து வருபவர்! இளைஞர், இலட்சிய வீரர், கொள்கை ஒன்றையே தம் வாழ்க்கைப் பணியாகக் கொண்டவர்! இந்த மேயர் தேர்தலில் எதிரிகள் விட்ட அஸ்திரங்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்கியவர்.



டி. என். கிருஷ்ணன்

நடிப்பின் மூலம் இயக்கக் கொள்கைகளைப் பரப்பி வந்த இவர் நகர சபை உறுப்பினராகி மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் தொண்டராகவே மாறி விட்ட இலட்சிய வீரர்!

தி. துரைக்கண்ணு

கூப்பிட்ட குரலுக்கு "ஏன்" என்று கேட்டு, "என்ன வேண்டும்" என்று கூறி பதவி பெருத கவுன்சிலராக பணிபுரிந்து வந்த இவர் சென்ற ஆறுமாத காலமாக அந்தப் பதவியில் அமர்ந்து தினம் தினம் மக்களைச் சந்தித்து அவர்களின் மனக் குறையைப் போக்கிடும் "முழுநேரத் தொண்டர் மக்கள் கவுன்சிலர்" என்று எல்லோராலும் பாராட்டப் படுபவர்.

திருமதி. அலமேலு அப்பாதுரை

பண்பால், பழகும் விதத்தால் பாட்டாளி மக்களின் மனதைக் கவர்ந்துவிட்ட வீராங்கனை, மாற்றுக் கட்சியினரின் காலித்தனத்திற்கும் அஞ்சாது செயலாற்றி வருகிருர்.

தி. சு. நல்லதம்பி

நாட்டுக்கு சேவை செய்யும் நல்லிளஞ் சிங்கம்! மாற்ருரும் மதிக்கின்ற தங்கம்!



சி. ஆா. பாலசுந்தரம

பெத்து நாய்க்கன் பேட்டையை காங்கிரசின் கற்கோட்டையாக கருதி வந்தனர். அத்தகைய பலம் பொருந்திய கோட்டை சுக்கு நூருக உடைபட்டது! பெத்துநாய்க்கன் பேட்டை நகரசபை உறுப்பினராக வெற்றியடைந்தவர் இவர். காங்கிரஸ்காராக முன்பு இருந்தவர். தியாகங்கள் பல செய்தவர். திராவிட முன்னேற்ற கழகம் நடத்திய எல்லாபோராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.



முனுசாமி

வரிக் குழுத் தலைவராகப் பணிபுரிந்து ஏழைகளுக்கு நல்வாழ்வளித்ததோடு, இதுவரையில் வரிகளை ஏமாற்றி வந்த பெரும் பணக்காரர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு நியாயமான வரிகளை விதித்து சென்னை நகர சபையின் செல்வ நிலையையும் பெருக்கியவர்.

அண்ணமலை

ஆற்றலிலும், நெஞ்சுறுதியும் கொண்டவர். இந்த ஆறுமாத காலத்தில் சிறப்பான பணிகளை புரிந்தவர்.



சு. பாலன்

பட்டாளம் பகுதியில் வெற்றி பெற்றவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளை மறவாமல் நற்பணிபுரிந்து வருபவர்.



சா. கணேசன்

கொள்கையின் குணக்குன்றாய், லட்சியத்தின் திருவிளக்காய் விளங்கும் இவரது அயராத உழைப்பினுல் இவருடைய தொகுதி சீரும் சிறப்பும் பெற்றிருக்கிறது!

பொன்னுசாமி

முகத்திலே விழுந்திருக்கும் கோடுகள் முதுமைக்கு அடையாளமானலும் இலட்சியத்திலே முதுமைக் கீறல்கள் இல்லை! மண்ணில் புகழுடைய பொன்னும் பொருளும் தேவை அல்ல- கொள்கையின் வலிவு என்பதை உணர்ந்து மக்களுக்கு தொண்டாற்றும் தூயவர்.



பார்த்தசாரதி

பாரத புத்திரர்களின் காலையை விரட்டி—வெற்றிக்கு சாரதியாய் விளங்கும் இவர் ஆஜாத் நகரிலே வெற்றி கண்டவர்!



சிட்டிபாபு

சீர் குலைந்து கிடக்கும் நிர்வாக ஊழல்களை அம்பலப் படுத்தி நகர சபையை செப்பனிட்டு வரும் தீரர், நம் இலட்சிய வீரர்!



சு. துலுக்கானம்

ஏச்சுக்கும் பேச்சுக்கும் அஞ்சாமல் பணியாற்றி, வாக்களித்த பெருமக்களின் நல்வாழ்வுக்கு பெரிதும் தொண்டாற்றி வரும் தூய பண்பாளர்!



சடகோபன்

சத்திய மூர்த்தி நகரில் வென்ற சடகோபன் நம் இலட்சிய விளக்கை காத்திடும் சத்தியவானக இருந்து பணி புரிந்து மேயர் தேர்தலின் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தார்! இவரது லட்சியம் இவரால் பல நற்பயன்களை அடைந்திருக்கிறது!



வேதாசலம்

மாற்ருரின் சலசலப்புக்கு அஞ்சாது பணி புரியும் தீரர்!



இராமதாஸ்

ஆசை வார்த்தைகளுக்கு மயங்காத இந்த தீரர் பூங்கா நகரில் வெற்றி பெற்ற நம் இலட்சியத் திருவிளக்கு!

சுப்பிரமணியம்

காமராஜர் நகரில் வெற்றி பெற்று அங்கே கழகக் கொடியை ஏற்றி வைத்தவர். காமராஜரைப் போல் "ஆகட்டும் பார்க்கலாம்" என்று சொல்லாமல் மக்கள் குறைகளை உடனுக்குடன் கவனித்து வருபவர்.

தம்பிதுரை

ஏழைபரின் இதயம் உணர்ந்த இளவல்!

குமாரசாமி

கடமை உணர்ச்சிக்கு இலக்கணமாய் கொள்கையை காத்திடும் குணக்குன்று!

சேரி வாழ்மக்களுக்கு சீரமைப்பான வாழ்வைத் தேடித்தர அல்லும் பகலும் அயராது பணி புரியும் பண்பாளர். கண்ணியத்தால்—கட்டுப்பாட்டால் இயக்கத்திற்கு பெருமைத் தேடித் தரும் லட்சிய வீரர்!

கோ. இளவரசு

பண்பற்ற ஆட்சிக்கு புதுப் பாடம் போதித்த நண்பர் இளவரசு.

கபாலி

இராஜா அண்ணமலைபுரம் நகர சபை உறுப்பினர் கபாலி, காங்கிரஸ்காரர்களின் குறுக்கு புத்திக்கு சரியான பாடம் கற்பிக்கும் வீரராக விளங்கி வருகிருர். கொள்கைக்காகவும் தான் சார்ந்திருக்கும் தி. மு. கழகத்திற்காகவும் எதையும் செய்யவும் துணிவு உள்ளங் கொண்டவர்.

சுதந்திரம் என்ற தத்துவம் ஜனநாயகத்தின் அடிப்படையிலே அமைய வேண்டும்!

ஆபிரகாம் லிங்கன் வெறும் உபதேசி அல்ல.. திட்டமிட்டு செயலாற்றிய தீரர்!

அன்பழகன் பேச்சு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திற்கு உரிமையை உணர்த்தினார், வெற்றி கண்டார்!

நம் நாட்டிலே தோன்றிய காந்தி, விடுதலை பெறுவதற்காக கட்டுக்கோப்பான அமைப்பை ஏற்படுத்தி அதை விடுதலை இயக்கமாக மாற்றி அதை தானே முன்னின்று நடத்தினார். நாட்டிற்கும் விடுதலையும் கிடைத்தது. பின்னர் கோட்சேயின் குண்டுக்கு பலியானார்!

அதேபோல் தான் ஆபிரகாம் லிங்கன் இருபத்தி ஏழாவது வயதிலே, அமெரிக்காவிலே உள்ள இலினாஸ் மாளிகையிலே சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்றார், முப்பத்தி ஏழாவது வயதிலே திருமணம் புரிந்து கொண்டார் ஆபிரகாம் லிங்கன்.

ஏறத்தாழ ஆபிரகாம் லிங்கன் 55 வயதுவரை வாழ்ந்தார். அவர் வாழ்ந்த நாட்களிலே தனது முப்பத்தி ஏழாவது வயதிலேதான் அரசியல் உலகிலே செல்வாக்கு பெற்றார். அடிமை விலங்கை ஒடித்தார், அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டுமென்பதற்காக நல்ல விளக்கங்கள் தந்தார்! அவருடைய கொள்கைவிளக்கத்தை எதிர்த்த நேரத்தில் கொஞ்சமும் சலியாமல், எதிர்ப்புகளை சமாளித்தார். தெற்கு அமெரிக்காவிலே உள்ளவர்கள் அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்ற கொள்கையை அனுமதிக்க மாட்டோம் என்று எதிர்ப்பு தெரிவித்தார்கள். பட்டாளம் அமைத்து போர்க்களத்தை சிருஷ்டித்து வெற்றி பெற்றார். 55 வயதிலேதான் அவர் வெற்றி பெற்றார்!

இவருடையகொள்கையை ஏற்றுக் கொள்ளாமல் தோல்விகண்டவர்களிலே ஒருவன் மாறுபட்ட உணர்ச்சி கொண்ட ஒருவன். ஆபிரகாம் லிங்கன் நாடகத்தை பார்த்துக் கொண்டிருக்கும் போது மூளை கலங்கும் விதத்திலே சுட்டுக் கொன்றான். அந்தக் கொடியவன், அடிமை விலங்கை தகர்த்தெறியவேண்டுமென்றே எண்ணம்—கருத்து அந்த மூளையில் இருந்துதானே வெளிப்பட்டது என்று கருதித்தான் சுட்டுக் கொன்றானோ என்னவோ?

ஆபிரகாம் லிங்கனின் மூளை கலங்கும் விதத்திலே சுடப்பட்டார்! உத்தமர் காந்தி நெஞ்சிலே சுடப்பட்டார்.

ஆபிரகாம் லிங்கனின் மூளை அந்த நாட்டிலே அடிமைத்தனத்தை ஒழிக்க பயன்பட்டது. இங்கே உத்தமர் காந்தியின் இதயம் விடுலைக்கு பயன் பட்டது.

ஆபிரகாம் லிங்கன் வெறும் உபதேசியாக மட்டுமில்லை! பாகிஸ்தானை பெறுவதற்கு ஜின்னா எப்படி திட்ட மிட்டு காரியத்தை சாதித்தாரோ, அப்படி திட்டமிட்டு செயலாற்றி காரியத்தை சாதித்துக் கொண்டவர். அவர் இறந்து போனாலும் இன்னும் அவரது கொள்கை இருக்கிறது.

இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் ஆபிரகாம் லிங்கனைப் பற்றி பேசியிருக்கிறார்.

"ஆபிரகாம் லிங்கன் தனி மனிதரல்ல. ஒரு நாட்டு அரசியல் வாழ்வுக்கு கடமைப்பட்டவர்.

தத்துவத்தின் முன்னோடி, ஜனநாயகத்திற்கு வழி அமைத்துக் கொடுத்தவர்.

மனித வாழ்க்கை செழிப்புற வேண்டுமானால் மனிதத் தன்மையை மதிக்கின்றவர்களாக, உணர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற தத்துவத்தின் முன்னோடி" என்று பாராட்டி பேசியிருக்கிறார்.

நானும் ஆபிரகாம் லிங்கன் சொன்ன ஜனநாயகம் இங்கே இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இங்கே இருப்பது அவர் சொன்ன ஜனநாயகம்தானா? இதற்கெல்லாம் ஆபிரகாம் லிங்கன்தான் வழிகாட்ட வேண்டும்.

மக்கள் வாழ்வுக்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரால் ஆளப்படுவதுதான் ஜனநாயகம் என்றார். இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் ஆள்கிறார்கள். ஜனநாயகம் என்று இதைச் சொல்லுகிறார்கள்.

ஆபிரகாம் லிங்கன் சொன்ன கருத்து இங்கே உருவத்தில் உண்மையானதாக இருக்கிறது.

இங்கே மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்—தேர்வு நடக்கிறது—நமக்கு தெரிகிறது!

இங்கே மனிதர்கள் தான் ஆட்சி செய்கிறார்கள்—நமக்கு தெரிகிறது!

இங்கே மனிதர்கள் இருக்கிறார்களே தவிர மனிதத்தன்மை அற்றவர்கள் என்ற முறையிலே சந்திக்கிறேன்.

மனிதர்களைப் போலத்தான் நடக்கிறார்கள். மனிதத்தன்மை உள்ளவர்கள் நடப்பதைப்போல் நடக்கவில்லை.

மனிதத் தன்மை இருக்கிறதென்றால் காந்தியாரும், ஆபிரகாம் லிங்கனும் கூறியதுபோல் இங்கே இருக்கின்றவர்கள் மனிதர்களை மதிக்க வேண்டும். மாற்றுக் கட்சிக்காரர்களானாலும் மதிக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு ஆட்சிபீடத்திலிருப்பவருக்கு மாற்றுக் கட்சிக்காரர்களை மதிக்கின்ற புத்தி, பஞ்சம்! காரணம், அவர்களுக்கு ஆபிரகாம் லிங்கனைப் பற்றி தெரியாது. அதிகாரபீடத்திலே அமர்ந்து ஆட்டிப் படைக்கின்றவர்களுக்கு இது எந்த மருந்துக் கடையிலே கிடைக்கும் என்று கேட்பவர்களாக இருக்கிறார்கள்.

ஜனநாயகம் வேறு சுதந்திரம் வேறு அல்ல! சுதந்திரம் பெற்றால்தான் மற்றவைகளை பெற முடியும். சுதந்திரம் என்ற தத்துவம் ஜனநாயகம் என்ற அடிப்படையிலே இருக்க வேண்டும். அந்த அடிப்படைக் கருத்தைத்தான் இந்தியாவின் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தெளிவாக காந்தி கூறினார்.

"நான் கேட்கும் சுதந்திரம் ஒரு இடத்தில் மட்டும் குவித்து வைப்பது அல்ல!" என்றார்.

"நான் கேட்கும் சுதந்திரம், பசி பட்டினி என்று வதைபடும் போது கோயில் குருக்கள், ஆண்டவனுக்கு ஆறுகால பூசை செய்து உணவுப் பொருள்களை படைத்து குடும்பம் நடத்துகிறானே அதுவல்ல! மக்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதுதான் உண்மையான சுதந்திரம்" என்று கூறினார்.

உத்தமர் காந்தியாரையும் யாரும் அடிமைபடுத்தக்கூடாது, தீண்டாமை மனிதனுக்கு மனிதன் மட்டுமல்ல; உயர் ஜாதி—கீழ் ஜாதி என்பதிலே மட்டுமல்ல. மத்திய அரசுக்கும் மாநில அரசுக்குமே உள்ள தீண்டாமை ஒழிய வேண்டும் என்றார்.

சுய ஆட்சி மாகாணங்கள் இருக்க வேண்டுமென்று விரும்பினார்.

இந்தியாவிலே ஒவ்வொரு மொழியும் பேசப்படுகின்றவர்கள் ஒவ்வொரு நாடாகவே இருக்கின்றன. தமிழ் மொழி பேசப்படுகின்ற மாநிலம் தமிழ் நாடு என்று கூறப்படுகிறது.

இதுபோல் ஒவ்வொரு மொழி பேசப்படுகிற பகுதிகள் சுய ஆட்சி செய்ய வேண்டுமென்று நினைத்தார்.

ஆபிரகாம் லிங்கனும் அமெரிக்காவிலே உள்ள பகுதிகளை தனி தனி சுயாட்சி நடத்த வழிவகை செய்து கொடுத்தார். உத்தமர் காந்தி இங்கே தீண்டாமையை ஒழித்தது போலவே, அங்கே நீக்ரோ அடிமை விலங்கை ஒடித்தெறிந்தார், லிங்கன்.

காந்தி அவர்கள் தீண்டாமையை ஒழித்தாரே தவிர ஆபிரகாம் லிங்கன் செய்ததுபோல் தனித்தனி மாகாண சுயாட்சிக்கு வழிவகை செய்யவில்லை!

அவருடைய ஜனநாயக தத்துவம் தனி மனிதரின் உரிமையை, கட்டுப்பாட்டை பாதுகாத்தது!

தனி உரிமை—தனி ராஜ்ய உரிமையை அவர் மதித்தார். அந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டார். காந்திக்கு வழி காட்டினார்.

ஆபிரகாம் லிங்கன் காட்டிய சுதந்திரம்தான் நாம் நடத்துகின்ற இன்றைய போராட்டம்.

இந்த பாதையிலேதான் காந்தி போராடினார். லோகமான்ய கங்காதர திலகர் போராடினார். சிறையிலே செக்கிழுத்த வ. உ. சிதம்பரனாரும் இப் பாதையிலேதான் போராடினார். அப்படிப்பட்ட தத்துவத்தை போதித்த ஆபிரகாம் லிங்கன் நமக்கு சொந்தக்காரர் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் கொள்கையை மதித்து நடக்கின்ற மனிதர்கள் உலகத்தில் எந்தக் கோடியில் இருந்தாலும் அவர்கள் நமக்கு சொந்தக்காரர்கள்தான்! மனித உரிமையை மதிக்கின்ற எவரும் நமக்கு உறவினர்கள்தான்!

சீனாவிலே ஐந்து பேர் இருக்கிறார்களென்றால் — ரஷ்யாவிலே நாலு பேர் இருக்கிறார்களென்றால் அவர்களும் நமக்கு சொந்தக்காரர்கள்தான்! அமெரிக்காவிலே ஏழைகள் இங்கே இருக்கிறார்கள் என்று சொல்லக் கூடும், மனித உரிமையை மதிக்கின்றவர்கள் எங்கு இருந்தாலும் நமக்கு உறவினர்கள்தான்!

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவிற்கு வழிகாட்டினார். நாங்களும் இந்த நாட்டிற்கு சுதந்திரத்தை தேடித் தருவோம். மற்ற நாட்டிற்கெல்லாம் வழி காட்டுவோம் என்று ஜின்னா கூறினார்.

ஜின்னாவின் பரந்த கருத்து இஸ்லாம் இனத்திற்கு. அவர் ஒரு முஸ்லீமைப்போல் வாழவில்லை—ஒரு வெள்ளைக்காரன் வாழ்ந்ததைப்போல் வாழ்ந்து முஸ்லீம் இனத்திற்கு வழி காட்டினார்.

(11-ம் பக்கம் பார்க்க)

ஆளுங்கட்சி பாதரசம் பூசிய கண்ணாடி எதிர்க்கட்சிகள் பாதரசம் போடாத கண்ணாடி!

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக தூக்கு மேடை ஏறவும் தயார்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சி. பி. சிற்றரசு பேச்சு

ஏன் ஆளாக்க வேண்டும்? இதுவா இந்த சர்க்காரின் வேலை?

நாங்கள் பஸ் தொழிலை தேசிய மயமாக்க வேண்டும் என்று சொன்னோம். ஆனால் ஆளும் கட்சியினர் ஒவ்வொரு ப்ஸ் முதலாளியையும் ஒவ்வொரு வகை செலவுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். ஒருபஸ் முதலாளி எம், எல், ஏ தேர்தலுக்கும் தங்களுக்கும் லட்சக்கணக்கில் செலவு செய்வார்கள் என்ற நம்பிக்கையில் பஸ் தொழிலை தேசிய மயமாக்கத் தயங்குகிறது பஸ் முதலாளிகளுக்கு தனிச் சட்டம் வகுத்துக் கொடுத்து இருக்கிறார்கள். இதை பஸ் முதலாளிகள் சாதகப்படுத்திக் கொண்டு கட்டணம் விதிப்பதில் அவர்கள் இட்டதை சட்டமாக்கிக் கொள்கிறார்கள். வங்காளத்திலே டிராம் கட்டணத்தை காலணா உயர்த்தினார்கள். அதைக் கண்டே, வங்கமக்கள் கொதித்து எழுந்தார்கள், கிளர்ச்சி நடத்தினார்கள். இப்போது அந்த காலணாவை குறைத்துக் கொண்டு டிராம் ஓடுகிறது. அந்த உணர்ச்சி இங்கு இல்லை. அத்தகைய உணர்ச்சி இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட வேண்டும். நேற்று 14 அணாவாக இருந்த பஸ் கட்டணம் இன்று ரூபாய் ஒன்று என்று சொன்னாலும் மக்கள் ஏன் என்று கேட்பதில்லை. எல்லாம் தலை எழுத்து என்று இருந்து விடுகிறார்கள், இந்த மக்களுக்கு மனதில் தைரியம் இல்லை. மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த நாம் இது போன்ற பல சந்தர்ப்பங்களில் ஒன்று சேர்ந்து இருக்கிறோம். இதை நாம் இதோடு விட்டு விட்டால் மந்திரிகள் பலவாறு பேசத் தொடங்கி விடுவார்கள், மந்திரிகளே உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். நீங்கள் மந்திரியாக இருக்க விரும்பினால் மக்களை கொஞ்சம் மதித்து நடவுங்கள். மக்கள் நீங்கள் தேர்தலில் ஓட்டுப் போடும் போது "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து.

அதனை அவன் கண் விடல்" என்ற குறட்பாவுக்கு ஏற்ப ஓட்டளியுங்கள். இல்லை நாங்கள் காளை மாட்டுப் பெட்டிக்குத் தான் ஓட்டுப் போடுவோம் என்றால் சர்க்கரை மூன்று ரூபாய்க்கே வாங்குகிறோம். அடிமையாக என்றென்றும் இருக்கிறோம் என்று பொருள்!

இப்போது இங்கே எனக்கு டீ கொண்டு வந்து கொடுத்தார்கள் அதிலே சர்க்கரை இல்லை ஒரு வேளை இந்த சர்க்கரை இல்லாத டீயை குடித்து விட்டு சர்க்கரை பஞ்சத்தை பற்றியும் விலையை பற்றியும் பேசட்டும் என்று டீ கடைக்காரர் நினைத்திருக்கிறார் போல இருக்கிறது.

இன்று நம் மாகாணத்துக்கு ஒரு கவர்னர் இருக்கிறார் அவருக்கு பத்து லட்சம் ரூபாயை கொட்டிக் கொடுத்து வேலையில்லாமல் உட்கார வைத்து இருக்கிறார்கள் ஒரு மாகாணத்துக்கு மந்திரி சபை கலைந்து நெருக்கடி நிலைமை ஏற்படும் போது தான் கவர்னர் தேவை மற்ற சமயங்களில் கவர்னருக்கு வேலைஇல்லை அப்படிப்பட்ட ஒரு பதவிக்கு பத்து லட்சம் ரூபாயை மக்களின் வரிப்பணத்தை கொட்டிக் கொடுத்து மாகாணத்துக்கு ஒருவரை நிரந்தமாக வைத்திருக்க வேண்டியதில்லை. சென்னையில் போலிசில் இருக்கும் மூன்று போலீஸ் நாய்கள் மாகாணத்தில் எங்கு துப்புக் கண்டு பிடிக்க வேண்டுமோ அங்கே கொண்டு செல்லப்படுவது போல, டெல்லியிலே இரண்டு அல்லது மூன்று கவர்னர்களை வைத்துக்கொண்டு எந்த மாகாணத்தில் நெருக்கடி ஏற்படுகிறதோ அங்கே அவர்களில் ஒருவரை அனுப்பலாம் சாதாரண காலங்களில் பொறுப்பளிக்கலாம் இதனால் மக்களின் வரிப்பணம் பாழாகாமல் பல இலட்சம் ரூபாய்கள் மீதியாகும்.

நம் நாட்டில் இரண்டு கிழவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் முற்போக்கு வாதிகளை முன்னாலும் செல்ல விடுவதில்லை பின்னாலும் செல்ல விடாமல் ஏறுக்கு மாறாக பேசி வருகிறார்கள். அவர்கள் தான் ராஜகோபாலச்சாரியும் பெரியாரும்.

ஆட்சியாளர்களே வெவ்வேறு மாற்றுக் கட்சியைச் சேர்ந்த நாங்கள் எங்கள் கொள்கைகளை எல்லாம் சற்று ஒதுக்கி விட்டு உங்களை ஒழித்தால் தான் இந்த நாடு உருப்படும் என்று ஒன்று சேர்ந்து விட்டால் உன்னால் சமாளிக்க முடியுமா? ஆனால் காமராஜர் ஆட்சியை ஒழிப்பதல்ல எங்கள்வேலை. மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம் ஆகியவை நியாயமான முறையில் கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் இந்த போராட்டத்தை ஆரம்பித்து இருக்கிறோம். நாங்கள் போராட்டம் நடத்துகிறோம் என்று சொன்னவுடன் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கலகம் செய்கிறார்கள் என்று சொல்லி ராணுவத்தையும் போலீஸையும் விட்டு அடக்குமுறை கையாளலாம், ஆனால் கேரளத்தில் நடந்தது கிளர்ச்சியாம் அதற்கு மட்டும் ஏன் ராணுவத்தை அனுப்பவில்லை?

மந்திரிகளே நீங்கள் மக்களை மதித்து நடக்காவிட்டால் உங்கள் ஆட்சிக்கே நீங்களே குழி தோண்டிக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம்.

காங்கிரஸ்காரர்கள் நாங்கள் தானே. ஓட்டுரிமை கொடுத்தோம்; எங்களுக்குத்தான் ஓட்டுப் போட வேண்டும் சொல்கிறார்கள். நான்தானே பெற்றேன் இந்தப் பெண்ணை, நானே தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று ஒருவன் சொல்ல முடியுமா?

ஆளும் கட்சி பாதரஸம் பூசிய கண்ணாடி, மற்ற கட்சிகள் பாதரசம் பூசாத கண்ணாடி. அவர்கள் கண்ணாடியில் அவர்கள முகம மட்டும்தான் தெரியும். மற்ற கட்சிகள் கண்ணாடியில் எல்லாம் தெரியும், மக்களின் தேவைக்கு வேண்டியதைக் கொடுக்காவிட்டால் மக்கள் எரிமலையாகி விடுவார்கள். உன்னால் முடியாவிட்டால் மக்கள் எரிமலையாகுமுன் விலகி ஓடி விடு. உன்னால் இன்று 6,85,500 பேர் படித்து விட்டு வேலையின்றி அலைகிறார்கள். இந்தப் பெரிய போராட்டத்தில் சிறை செல்ல தி. மு. க.வைச் சேர்ந்த 50,000 பேர்கள் தயாராய் இருக்கிறார்கள். நாங்கள் மக்கள் சக்திக்கு ஒரு பரிகாரம் தேட வேண்டும். மக்கள் சக்திக்குமேல் உலகில் எந்த சக்தியும் இல்லை, மக்கள் கண்ணீருக்கு சக்தி இருக்கிறது. அந்தக் கண்ணீரில் நீங்கள் அடித்துச் செல்லப்படுவீர்கள். நாங்கள் எல்லாம் தூக்கு மேடை சென்றாவது, இந்த நாட்டு மக்களுக்கு விடுதலை தேடித் தர, நல்வாழ்வு தேடித் தரத் தயங்கமாட்டோம் என்று கூறி பேச்சை முடித்துக் கொண்டார்.

உதித்தெழுந்தான் உதயசூரியன்!

—எ. கலைமுகிலன்—

கதியிழந்த காங்கிரசின் ஊழலாட்சிமாய
மதியிழந்தோர் மமதையெலாம் மடிந்துபோக
கொதித்தெழுந்த திராவிடரின் திருஉளத்தால்
கிழக்குவானில் உதித்தெழுந்தான் உதய சூரியன்!

தன்னுரிமைத் தனியரசு கோருகின்ற
திராவிடத்துத் தீரரினம் ஓர்ந்ததொ ருதிர்ப்பால்
தென்னகத்து வானமதில் வெண்ணிலவுபோல
தணித்தெழுந்தான் தண்ணெனவே உதயசூரியன்!

உழைப்பவரின் உதிரமெலாம் உறிஞ்சி நாளும்
உவகையுறும் உலுத்தரினம் உதகை நோகவே
வழியமைத்த எண்ணமதால் மக்களுள்ள
வானதனில் உதித்தெழுந்தான் உதய சூரியன்!

தொல்லையெலாம் ஒல்லையிலே மாய்ந்தொழிந்து
எல்லையிலா இன்பமுடன் வாழ, மக்க
உள்ளமெலாம் உவகையினால் துள்ள, இங்கு
உதித்தெழுந்த 'உதயசூரியன்' வாழ்க! வாழ்கவே!

குடிசைகளை அறிவேன்! அங்கே வாழும் மக்களின் நிலையை உணர்வேன்! அந்தக் குறைகளைத் தீர்க்க அரும்பாடு படுவேன்!

சத்தியமூர்த்தி காலந்தொட்டு இருந்த ஏட்டுதிட்டங்களை நிறைவேற்ற முயலுவோம்

நகரசபையில் மேயர் அப்துல்காதர் முழக்கம்!

இந்த மாமன்றத்தின் தலைவனாக என்னை தேர்ந்தெடுத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்! உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளவும் கடமைப்பட்டிருக்கிறேன்!

நகர மன்றத்தின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு, என்னால் முடிந்த பணிகளை நிச்சயமாக செய்வேன் என்ற உறுதியையும் இந்த சபையில் வீற்றிருப்பவர்களுக்கு அளிக்க விரும்புகிறேன்!

சென்ற சில மாதங்களாக இங்கே மனமாச்சரியத்தைக் கண்டு வந்தோம்! இனியேனும் அதுபோன்ற மனமாச்சரியங்களை விட்டு விட்டு எங்களோடு ஒத்துழைக்க வேண்டுகிறேன்!

சென்ற ஆறு, ஏழு மாத காலங்களில் இந்த நகரத்தைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேன்! துணை மேயர் சிவசங்கரன் அவர்களோடு பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடிசைகளைக் கண்டிருக்கிறேன்! அங்கு வாழும் மக்களின் பரிதாப நிலையையும் கண்டு மனவேதனையடைந்திருக்கிறேன்! குறிப்பாக மழைக் காலங்களில் குடிசைவாழ் மக்களின் தவிப்பை, படும் துயரை நாம் எடுத்துச்சொல்லமுடியாததாகும்! எனவே குடிசைவாழ் மக்களின் நிலை எங்கள் மனதைவிட்டு என்றும் அகலாது என்பதை இந்தசபையினருக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்!

குடிசை பகுதிகளை சீரமைக்க வேண்டுமென்று எத்தனையோ காலங்களாக முயற்சி செய்யப்பட்டு வந்தன!

1940-ம் ஆண்டிலிருந்து, உயர்திரு சத்தியமூர்த்தி பதவி வகித்த காலத்தில் இந்த மாமன்றம் குடிசை வாழ் மக்களுக்காக பல திட்டங்களை தீட்டிற்று! அந்தத் திட்டங்களெல்லாம் வெறும்

ஏட்டளவோடு நின்று விட்டன! இனி தீட்டப்படும் திட்டங்களாவது செயல் வடிவில் வந்து மக்களுக்கு நல்ல பயனை அளிக்க வேண்டும். அதற்கு இந்த மாமன்றம் நல்ல ஒத்துழைப்பைத்தரும் என்றும் நம்புகிறேன்!

நீண்ட காலமாக என்னுடைய உள்ளத்தில் ஒரு ஆசை இருந்து வருகிறது! குடிசை வாழ் மக்களின் அவல நிலையைப் போக்கி அவர்களுக்கு ஓரளவேனும் வாழ்வளிக்க வேண்டும் என்பதுதான் அந்த ஆசையாகும்! என்னுடைய காலத்திலாவது இந்த நீண்ட கால குறைபாடு நீங்குமென்றும் நம்புகிறேன்! இந்த குறைபாடுகள் நீங்க உங்களுடைய ஒத்துழைப்பை பெரிதும் விரும்புகிறேன்!

நான் பதவிப் பெ-றுப்பில் இருக்கும் இந்த ஓராண்டுகாலத்தில் எதிர்க் கட்சிகளுக்கு அதிக வாய்ப்பளிப்பேன் என்ற உறுதி மொழியையும் அளிக்க விரும்புகிறேன்!

இந்த மாமன்றம் என்னோடு ஒத்துழைத்து பல நல்ல பணிகளுக்கு ஆக்கம் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னை தலைவனாக்கியதற்கு மீண்டும் உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டுகளும் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டது! காங்கிரஸ்காரர்களில் இருவர் இரண்டு ஓட்டுகளை செல்லாத ஓட்டுகளாக்கி தங்கள் கட்சிக்குப் போட்டனர்! ஓர் காங்கிரஸ் உறுப்பினர் வரவே இல்லை!

மின்னல் மின்னிற்று! இடி முழங்கிற்று!

திரு. அப்துல் காதர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டார் என்ற செய்தியை சபையின் பார்வையாளர்களும், பத்திரிகையாளர்களும் அறிந்து கொள்ளுவதற்குமுன்பே மக்கள் வெள்ளம் அறிந்து கொண்டு விட்டது! ஒரு மின்னல், ஒரு பெரும் இடியோசை அங்கிருந்து கிளம்பிற்று! "வாழ்க அப்துல் காதர்! வாழ்க தி.மு.க, ஒழிக காங்கிரஸ்" என்ற இடியோசை வானத்தைப் பிளந்தது, பிறகு பலத்த மழையும், மக்களுடைய கையொலியும் இடையிடையே போட்டியிட்டுக் கொண்டிருந்தன!

மேயர் ஆசனத்தில் மேயர்!

தி. மு. க. மேயராக வெற்றி பெற்ற திரு. அப்துல்காதரை. தி, மு. க. நகர சபைக் கட்சித் தலைவர் திரு. ஜீவரத்தினம், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. டாக்டர் சீனுவாசனும் மேயர் ஆசனத்தில் அமர்த்தினர்! அப்போது நகர சபையில் கையொலியை எழுப்பி ஆரவாரம் செய்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்!

துணை மேயர் தேவராஜன்

பிறகு துணை மேயரின் தேர்தல் நடைபெற்றது! தி, மு, க. சார்பில் திரு. தேவராஜன் போட்டியிட்டார்! அவரை எதிர்த்து ராஜரத்தினம் அவர்களை காங்கிரஸ்காரர்கள் போட்டியிட வைத்தனர்!

வெட்கம்! வெட்கம்!

மேயர் தேர்தலில் தோல்வியுற்ற பிறகு துணை மேயர் தேர்தலிலாவது போட்டியிடாமல் இருந்திருக்கலாம்! ஆசை வெட்க

12-ம் பக்கம் பார்க்க



துணைமேயராக தேர்ந்தெடுக்கப்பட்ட தேவராஜன்!

உரிமையைப் பற்றி பேசுகின்றவர்கள் உரிமையை மதித்து நடக்க வேண்டும்!

ஆபிரகாம்லிங்கனின் ஜனநாயக தத்துவம் தனி மனிதனின் உரிமைக்கு பாதுகாப்பளித்தது!

மனிதத் தன்மையை மதிக்கின்றவர்கள் எங்கு இருந்தாலும் அவர்கள் நமக்கு சொந்தக்காரர்களே!

அன்பழகன பேச்சு

8-ம் பக்கத் தொடர்ச்சி

நேருவின் பரந்த நோக்கம் இந்துக்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது. அவர் இந்து மாதிரி இருக்கிறாரே தவிர, வெள்ளைக் காரன்போல்தான் வாழ்கிறார், அவர் நோக்கம் இந்துக்களைத் தான் வாழ்விக்கும். நாளை நமது நாடு — நமது இனம் என்ன ஆவது?

நமது கடமையை நிறைவேற்ற வேண்டுகின்ற பரந்த நோக்கம் தான் 'யாதும் ஊரே' என்ற கருத்தாகும்.

'யாதும் ஊரே' என்பதற்காக பம்பாயிலே மேயர் பதவிக்கு சென்னையிலே இருந்து கூட்டிச் செல்ல மாட்டார்கள், எல்லோரும் சொந்தக்காரர்கள் தான். கடவுள் படைப்பிலே ஏது அடிமை? உயர்ந்தவன் தாழ்ந்தவன் பேதமேது?

ஆண்டவன் படைப்பு என்றால் நீக்ரோ—வெள்ளைக்காரன் என்ற பேதமேது?

ஆண்டவன் படைத்திருந்தால் நாலு வர்ணங்கள் ஏது?

ஆபிரகாம் லிங்கன் ஒரு இனம் —ஒரு குலம் என்ற கருத்தையும் மனித இனம் ஒன்று, மனிதத் தன்மை ஒன்று என்றும் கூறினார்.

அவர் பிறந்ததற்குப் பின்னாலே தான் அமெரிக்காவிலே நிற பேதம் ஒழிந்தது. அடிமை விலங்கு தகர்த்தெறியப்பட்டது. அடிமைகள் என்ற பேரால் மனிதர்களை விலைக்கு விற்காதே என்றார்! பெண்களுக்கு விலங்கு பூட்டி சித்திரவதை செய்யப்படுகின்ற கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்றார்.

ஒரு நாடு இன்னொரு நாட்டை அடிமைப் படுத்தலாமா? ஒரு இனம் மற்றொரு இனத்தினரை கொடுமைப்படுத்தி செல்வாக்கு பெறுவது நியாயமா? மனித உரிமையிலே தலையிடலாமா என்பதை எண்ணிப் பார்த்தால், ஆபிரகாம் லிங்கன் கண்ணுக்கு தெரிந்தால்தான் புரியும்!

ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கையை ஆழ்ந்து படித்தால் எல்லோருமே வெற்றி காண முடியும் அவரது கருத்துக்களை புரிந்து கொண்டு செயலாற்றினால் முயற்சித்தால் நிச்சயம் வெற்றி பெறுவோம்.

நம் நாட்டிலே உள்ளவர்களுக்கு முயற்சிக்கு வித்தூன்றவும், ஊக்கமளிக்கவும்கொள்கை பிடிப்பு உண்டாக்கவும், நாட்டில் முன்னேற்றம் காணவும்; ஆபிரகம் லிங்கனின் வாழ்க்கை உதவும்!

என்னை மதித்து வருகிறார்கள் என்றால் தன் மீது வைத்துள்ள நம்பிக்கைதான் அதற்கு காரணம். பொது வாழ்க்கையிலே நம்பிக்கையுடையவனாக இருந்து தனி வாழ்க்கையில் திருடனாக இருப்பதை விட பொது வாழ்க்கையை சிறப்பானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். பொது வாழ்க்கையிலே தவறு செய்கின்றவன்தான் பெரிய குற்றவாளி, பொது வாழ்க்கையிலே ஈடுபடுகிறவர்களின் கொள்கை தெளிவாக இருக்கவேண்டும். தூய வாழ்க்கையிலே ஈடுபாடு கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

"இந்த நாட்டு எல்லா குழந்தைகளும் வெள்ளை மாளிகையிலே அமரக்கூடிய பண்பாடு இருக்க வேண்டும்" என்று லிங்கன் கூறியிருக்கிறார். "உரிமையைப் பற்றி பேசுகின்றவர்கள் உரிமையை மதிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்! தனக்குத்தானே உரிமையை மறுத்துக் கொள்ளாதவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்கள் உரிமையை அலட்சியம் செய்கின்றவர்களாக இருக்க கூடாது. அலட்சியம் செய்கின்றவர்களை ஆண்டவன் நல்லவனாக இருந்தால் கவனித்துக் கொள்வான்" என்றார்.

இங்கே இருக்கின்றவர்கள் ஆட்சியாளர்கள் உரிமையை அலட்சியம் செய்கிறார்கள். மாற்றுக் கட்சிக்காரர்களை மதிக்க மறுக்கிறார்கள். ஆபிரகாம் லிங்கன் கூறியதுபோல் ஆண்டவன் நல்லவனாக இருந்தால் இவர்களை அவனே கவனித்துக்கொள்வான்

ஆபிரகாம் லிங்கன் உரிமைக்கும் விடுதலைக்கும் வழிகாட்டி! அவர் சொன்ன சுதந்திரம் எல்லோரும் வாழ, பாட்டாளி மக்கள் பெருமகிழ்ச்சியோடு வாழவும் அமையவேண்டும் என்றார்.

இங்கே. இப்போதுள்ள சுதந்திரம் கரும்புத்தழைக்கு உள்ள சுவையைப்போன்றது. கரும்புச் சாறுகது உள்ள சுவைபோல இல்லை. இதையே இனிக்கிறது. என்கிறார்கள்.

நாம் ஆபிரகாம் லிங்கன் சொன்ன கருத்துக்களை அறியவும், அவரது செயல்களை பாராட்டவும். அவர் வழிநடப்பதற்கான மனப்பக்குவம் பெறவும் இவ் விழாவினை ஏற்படுத்திக்கொடுத்த மன்றத்தாருக்கு நன்றி தெரிவித்தும், மன்றத்தாரின் பணிகளுக்கு ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவோடு என் உரையை முடிக்கிறேன்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விதண்டாவாதத்திற்காகவும், வீண் ஜம்பத்திற்காகவும், வரட்டு கௌரவத்திற்காகவும் போட்டியிட்டுத் தோற்பதில் என்ன பயன் என்பது தான் நமக்குப் புரியவில்லை!

அரசியல் என்றாலே இவைகளெல்லாம் தெரிந்திருக்க வேண்டும்—இவைகள் தெரிந்தால் வெற்றி பெற முடியும் என்று நினைத்தால், அது தான் இந்த நாட்டிற்கு அவசியம் என்று அந்தப் போக்கிலேயே காங்கிரஸ் கட்சி நடந்துசெல்லுமானால்—அங்கேயும் நாங்கள் வருவோம், உங்களை வெல்லுவோம் என்பதை மிகத் தாழ்மையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்!

எல்லாவிதமான சக்திகளையும் முறியடித்து வெற்றி பெற்ற மேயர் அப்துல்காதரையும், துணைமேயர் தேவராஜையும் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்!

கொள்கைக்காகவே வாழ்ந்து, நாட்டுக்காகவே உயிரை பணயமாக வைத்து—மாடி வீடு கண்ணில் தெரிந்தும் அதை உதறித் தள்ளி விடடு, மந்தகாச வாழ்வு எதிரே நின்றும், அதை துச்சமென மதித்து விட்டு அப்துல்காதரை வெற்றி பெற வைத்து புகழ்க்கொடி பறக்க விட்டிருக்கும் நமது 45 கொள்கை வீரர்களையும் பாராட்டுகிறோம்!

காங்கிரஸ்கட்சியின் சர்வாதிகாரத்தை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு—கொள்கையில் முறண்பட்டிருந்தாலும் நம்மோடு ஒத்துழைத்த கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும் எங்கள் இதய பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

அதே போல், நம்முடைய ஆதரவில் வெற்றி பெற்றாலும், கொள்கையிலும், இலட்சியத்திலும் உள்ள வேற்றுமையை மறந்து நமக்கு உறுதுணையாக நின்ற திரு. அப்துல் சமத் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்! இவர்களைத் தவிர நமக்கு நல்லாதரவைத் தந்த நண்பர்களுக்கும் நம்முடைய நன்றி கலந்த பாராட்டை தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

மிக விழிப்பாக இருந்து மிக்க கவனத்தோடு பணிபுரிந்த நம்முடைய தலைவர்களுக்கும், குறிப்பாக நகர சபைக் கட்சித் தலைவர் திரு. ஜீவரத்தினத்திற்கும், திரு. முனுசாமிக்கும் தமிழ் மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

அரசியல் குட்டையை குழப்பி அதிலே மீன் பிடிக்க எண்ணிய நேரத்திலே—"அடுத்த மேயர் யார்"? என்ற வினா தமிழகம் முழுதுமே எழுந்த நேரத்தில்—தெளிவாக, உறுதியாக "அடுத்த மேயர் திரு. அப்துல் காதர் தான்" என்பதை 'மாலைமணி' ஏடு மிக விளக்கமாக அப்போதைக்கு அப்போது உங்களிடையே விளக்கிக் கொண்டு வந்திருக்கிறது எனவே இந்த வெற்றிச் செய்தியை மாலைமணி வாசகர்களுக்கு நாங்கள் அறிவிக்கும்போது எங்களையும் அறியாமலேயே ஒரு தனி மகிழ்ச்சியும், பூரிப்பும் ஏற்படுகிறது!

எனவே எங்கள் "மாலைமணி" வாசகர்களின் சார்பாக, வெற்றி பெற்ற மேயர் திரு. அப்துல்காதரையும், துணை மேயர் தேவராஜையும் "வாழ்க, வாழ்க" என வாழ்த்துகிறோம்! மக்களுக்கு நல்ல பணியினை புரிந்து நீங்களும்பெரும் புகழைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள், நம் கட்சிக்கும் பெரும் மதிப்பைத் தேடித் தாருங்கள் என்ற வேண்டுகோளையும் உங்கள் முன்பு வைக்கிறோம்!

Registered as a Newspaper in CEYLON

Regd No M. 7074 விலை 16 காசு **MALAIMANI** Phone No. 83285

ஏழைகளை வாழ வைப்பதே எங்கள் இலட்சிய கீதம்!

குடிசைவாழ் மக்களை காத்திடுவதே எங்கள் வாழ்க்கைப்பணி!

சென்னை நகரசபையில் ஜீவரத்தினம் கொட்டிய வெற்றி முரசம்!

மேயர் அவர்களே!

வழக்கம் போல் வெற்றி பெற்ற மேயரை இந்த மாமன்றம் பாராட்டி மகிழ்ந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இளைஞர் இந்த மாமன்றத்தில் மேயராக அமர்ந்திருப்பது கண்டு நாங்கள் பெருமைப் படுகிறோம்! பூரிப்படைகிறோம்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்களும் உங்களைப் பாராட்டுகிறோம்!

துர்ப்பாக்கிய வசமாக சிலர் வாழ்த்துக் கூறும் நேரத்தில் வரவு செலவு அறிக்கையை படிக்க முன்வந்துள்ளனர்! இன்று மேயர் பதவியை பெற்றிருக்கும் உங்களைப் பார்த்து "என்ன செய்தீர்கள், என்ன சாதித்தீர்கள்" என்று கேட்கின்றனர்! உண்மையிலேயே இது வருந்தத்தக்கதாகும்!

எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் சீனுவாசன் உங்களைப் பார்த்து, உங்கள் அழகைப் பார்த்து, உங்கள் சுறுசுறுப்பைப் பார்த்து, உங்கள் பருவத்தைப் பார்த்து வர்ணித்து வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார்! அது குறித்து கட்சித் தலைவன் என்ற முறையில் நானும் பெருமைப் படுகிறேன்!

மேயர் அவர்களே! நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சார்ந்தவராக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், உங்கள் உள்ளத்திலே கொள்கை விளக்கு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தாலும் ஓராண்டு காலத்திற்கு கட்சியை மறந்து, எல்லோரையும் ஒன்றாகப் பாவித்து பணிபுரிய வேண்டுகிறோம். சமசந்தர்ப்பம் அளிக்க வேண்டுகிறோம்!

எந்த குறை இருந்தாலும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவைகளைகடைப்பிடித்து முறையோடு எடுத்துச் சொல்லி குறைகளைத் தீர்க்க முயல வேண்டும்!

துர்பாக்கியவசமாக இங்கே பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள்! சேரிகளைப் பற்றிப் கூறினார்கள்! நான் மீனவர் குடிசையிலே பிறந்தவன். மீனவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்தவன், குடிசை வாழ்பவர்களின் அவதியைப் பற்றி நன்றாகப் புரிந்தவன்! எங்கள் கொள்கையெல்லாம் வீதியிலே வாழும்இரண்டரை இலட்சம் மக்களின் அவதியைப் போக்குவதுதான், குடிசை வாழ் மக்களின் அவல நிலையை ஒழிப்பதுதான்!

வரிகளைக் கொடுக்காமல் பதுங்கி வாழ்பவர்களைக் கண்டு பிடித்து, அவர்களிடம் வரியை வசூலித்து ஏழைகளுக்கு வசதியளிப்பதில்தான் எங்கள் கவனமெல்லாம் செல்லுகிறது! இதுதான் எங்கள் இலட்சியம், இதயகீதம்!

திராவிட முன்னேற்றக் கழகம் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஆறு மாத காலம் தான் ஆகிறது! இந்த ஆறு மாத காலத்தில் நாம் பல காரியங்களை செய்திருக்கிறோம்! எதிர் கட்சித் தலைவர் டாக்டர் சீனுவாசன் அவர்களோ "என்ன சாதித்தீர்கள், என்ன சாதித்தீர்கள்" என்று கேட்கிறார்! அப்படிக் கேட்டால் 40 உறுப்பினர் மட்டுமல்ல நூறு உறுப்பினர்களும், நிர்வாகிகளும் என்ன நினைப்பார்கள்?

அரசு காலத்தில் என்ன சாதித்திருக்கிறோம்! எதைச், சாதிக்க முடியுமென்று நினைத்தோமோ அதைச் சாதித்தோம்!

சத்தியமூர்த்தி காலத்தைப் பற்றி இங்கு எடுத்துக் கூறப் பட்டது! சத்தியமூர்த்தி செய்ததுதான் என்ன? மெரீனா கடற்கரையை அழகுபடுத்தி இருக்கலாம். மைலாப்பூர் வட்டாரத்தில் மின்சார விளக்குகளை ஏற்றி இருக்கலாம்! எங்கள் கண்களுக்குத் தெரிவது மெரீனா கடற்கரை மட்டுமல்ல, மைலாப்பூர் மட்டுமல்ல!

சேரி தெரிகிறது, சகதி தெரிகிறது, குடிசை தெரிகிறது, அங்கே வாழும் மக்களின் அவல நிலைத் தெரிகிறது! உலகத்திலே அழகிய கடற்கரை மெரீனா என்று போற்றப்படுகிறது; சென்னையில் எழில், எடுப்பு இவைகளைப் பற்றி பிரமாதமாக வர்ணிக்கப்படுகிறது! நீல விளக்குகள் போட்டாலும், மெர்க்குரி விளக்குகளை எறிய வைத்தாலும் குடிசைகள் ஒழிக்கப்பட்டாலன்றி சென்னையில் களங்கம் நீங்காது, நீங்கவே நீங்காது!

மதிப்புள்ள தலைவர் என்று நினைத்துக் கொண்டிருக்கும், கண்ணியமுள்ள தலைவர் என்று எண்ணிக் கொண்டிருக்கும் டாக்டர் சீனுவாசன் கேட்டார், "இந்த ஆறு மாதத்தில் என்ன சாதித்திருக்கிறீர்கள் என்று" அன்புள்ள தலைவர் என்பதால், நான் என்றென்றும் மதிக்கும் தலைவர் என்பதால் அவருக்கு பதில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் பன்னிரெண்டு ஆண்டுகளாக சாதிக்காத காரியங்களை, செய்யாத பணிகளை நாங்கள் 6 மாதத்தில் சாதித்துள்ளோம் என்பதை அவருக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்! இதை இந்த மாமன்றம் நன்கு அறியும்! நாங்கள் இதுவரை சாதித்திருக்கிற சாதனைகள் என்ன என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்

'ரிக்ஷாக்காரன்கூட கேவலமாகப் பேசுவதாக" கூறினார்கள்! ரிக்ஷாக்காரன்கூட — ரிக்ஷாக்காரன் என்று சொல்லாமல்கூட என்று சொல்லுவது ஏன் என்றுதான் புரியவில்லை! ரிக்ஷாக்காரன் என்றால் கேவலமாக மதிப்பவர்கள் நாங்கள் அல்ல! காரில செல்லுபவர்களுக்கு மட்டும் மதிப்பளிப்பவர்கள நாங்களல்ல! எல்லோரும் எங்களுக்கு ஒன்றுதான்!

இந்த சந்தர்ப்பத்தில் அதிகாரிகளை பழி வாங்கமாட்டோம். ஏழைகளை பழி வாங்கும் அதிகாரிகளையும் விட மாட்டோம் என்பதையும் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டுள்ளோம்!

மேயர் அவர்களே! நீங்கள் இளைஞர்! நீங்கள் எல்லாவற்றிலும் இளைஞர், ஆற்றல் படைத்தவர், செயல் வீரர் என்பதை மாலை 3-30 மணியிலிருந்தே பார்த்து விட்டோம்! உங்கள் பண்பை பற்றி, செயலைப்பற்றி எதிர்கட்சிக்காரர்களே எடுத்துரைத்திருக்கிறார்கள்! அவர்கள் உங்கள்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு ஏற்ப நீங்களும் பணி புரிய வேண்டும்!

உங்களை மேலும், மேலும் நான் பாராட்டிக் கொண்டிருப்பது தாய் மகளைப் பாராட்டுவதற்கொப்பாகும்!

மேயர் அவர்களே! நீங்கள் கட்சி வேற்றுமையை கடைபிடிக்காமல் பணி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களைப் பாராட்டுகிறேன்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மறியாது என்பதற் கொப்ப துணை மேயருக்கும் போட்டியிட்டார்களோ என்னவோ தெரியவில்லை! தி.மு.க. சார்பில் போட்டியிட்ட தேவராஜுக்கு 52 ஓட்டுகளும், ராஜரத்தினம் அவர்களுக்கு 44 ஓட்டுகளும் கிடைத்தன! திரு தேவராஜன் வெற்றி வாகைசூடி துணைமேயர் ஆசனத்தில் அமர்ந்தார்!

இளைஞர், சுறுசுறுப்பானவர் செயல் வீரர்!

மேயர் தேர்தலுக்கு போட்டியிட்டு தோல்வி யடைந்த காங்கிரஸ் நகரசபை உறுப்பினர் திரு. சுல்தான் மொய்தீன், காங்கிரஸ் கட்சித் தலைவர் டாக்டர் சீனுவாசன் ஆகியோர் மேயரின் ஆற்றலை, மேயரின், பண்பை வெகுவாகப் புகழ்ந்து பேசினர்! இளைஞர் என்றனர் செயல் வீரர் என்றனர் சுறுசுறுப்புடன் பணி புரிபவர் என்று அவர்கள் புகழ்ந்து பாராட்டிப் பேசினர்!

பிறகு தி. மு. க. நகர சபை கட்சித் தலைவர் ஜீவரத்தினமும் முனுசாமியும் மற்றும் பல உறுப்பினர்களும் மேயரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். (ஜீவரத்தினம், முனுசாமி இவர்களின் பேச்சை வேறு பக்கத்தில பார்க்கவும்)

கமிஷனர்

நகர சபை கமிஷனர் திரு. பாலசுப்பிரமணியம் மேயரோடு ஒத்துழைத்து பணி செய்வதாக உறுதியளித்தார்!

நன்றியுரை

மேயர் திரு. அப்துல் காதர் தாம் பதவி வகிக்கும் இந்த ஓராண்டு காலத்தில் தன்னால் முடிந்த வரையில் பாடுபடுவதாகவும், குறிப்பாகச் சேரி பகுதிகளை சீர்திருத்த பெருத்த முயற்சி எடுத்துக் கொள்ளப் போவதாகவும் அறிவித்து, தன் நன்றியை அனைவருக்கும் தெரிவித்து கொண்டார்!

வெள்ளத்தில் மூழ்கினார்!

மேயர் திரு. அப்துல் காதர் நகர சபை கட்டிடத்திலிருந்து வெளியே புறப்பட்டதும் மக்கள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு விட்டார்! கரை சேர முடியாமல் திணறினார், திண்டாடினார்!

வாழ்த்தொலி முழங்கிற்று

"வாழ்க அப்துல் காதர், வாழ்க தி. மு. க." என்ற வாழ்த் தொலியை முழக்கி மேயரை மக்கள் வழியனுப்பி வைத்து மகிழ்ந்தனர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சென்னை நகர ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் மேயர் திரு. அப்துல் காதரையும், துணைமேயர் தேவராஜுவையும் நாமும் பாராட்டி மகிழ்கிறோம்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி. எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ். 404 திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை-5.
அலுவலகம்: 1-35, வாணியர் தெரு, சென்னை